யாழ்ப்பாணம்

# இனப்பிரச்னையை ஜனாதிபதி ஏற்கும்வரை அரசுடன் பேசுவது இல்லே!

**- குமார் பொன்னம்பலம்**

(கொழும்பு) இலங்கையில் இனப்பிரச்னை உள்ளது என்பதை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க ஏற்றுக் கொள்ளும்வரை இலங்கை அரசுடனோ அல்லது எந்த ஒரு அமைச்சருடனோ இனிமேல் எந்த ஒரு பேச்சுக்களையும் நடாத்தமாட்டோம் என அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. (4-ஆம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 22 இதழ் 233
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 8 - 10 - 1993

## வடபகுதிவரும் பொருட்கள் தீவிர பரிசோதனையில்

(கொழும்பு) வடபகுதிக்கு கப்பல் மூலமாகவும், தரைமார்க்கமாகவும் கொண்டு செல்லப்படும் அத்தியாவசியப் பொருட்களின் பரிசோதனைகள் மேலும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வடபகுதியிலிருந்து கொழும்பு வருபவர்களினதும் (-4ம் பக்கம் பார்க்க)

# மன்னாரிலும் மட்டக்களப்பிலும் புலிகள் தாக்கு: ட்ரக் சிதறியது!

## 2 சிப்பாய் பலி, அறுவர் காயம்

(கொழும்பு)

மன்னார்-மட்டக்களப்பு மாவட்டங்களில் விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா படையினர் மீது மேற்கொண்ட இருவெவ்வேறு தாக்குதல்களில் இரு படையினர் கொல்லப்பட்டனர். ஆறு சிப்பாய்கள் காயமடைந்தனர். ட்ரக் வண்டி ஒன்று வெடித்துச்சிதறியது. ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா படையினர் பயணம் செய்து கொண்டிருந்த ட்ரக் வண்டி ஒன்று விடுதலைப்புலிகள் வைத்த கண்ணிவெடி ஒன்றில் வெடித்துச் சிதறியது. இதில் ஒரு சிப்பாய் பலியானார். ஆறுபடையினர் காயமடைந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் புதுப்பனம்சேனை என்ற பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மற்றுமொரு தாக்குதலில் ஒரு சிப் (2-ம் பக்கம் பார்க்க)

## மண்ணெண்ணைக் கப்பல் கட்டணத்தை நீக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்) கப்பல் கட்டணமின்றி மண்ணெண்ணையை பெற்றுத்தர வேண்டும் என்று யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினர் யாழ். அரச அதிபரிடம் மகஜர் மூலம் கோரியுள்ளார்கள்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இணைந்து ப. நோ. கூ. சங்கத் (4-ம் பக்கம் பார்க்க)

## கருணாநிதிக்கு குண்டுதுளைக்காத கார்?

(சென்னை) தி. மு. க. தலைவர் மு. கருணாநிதிக்கு குண்டு துளைக்காத கார் வழங்குவது குறித்தும் மற்றும் ஏ. கே. 47 ரக (2-ம் பக்கம் பார்க்க)

## கருணாநிதியின் குற்றச்சாட்டு புலிகளுக்கு வேதனை தருகிறது

(யாழ்ப்பாணம்) தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தன்னைக் கொல்வதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் அதன் மூலம் திரு கோபாலசாமியை வளர்க்க முயற்சிப்பதாகவும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி எமது இயக்கம் மீது ஒரு அபாண்டமான குற்றச் சாட்டை முன் வைத்துள்ளார். இது எமக்கு அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும், ஆழ்ந்த வேதனையையும் தருகிறது.

தமிழீழ விடுதலைப் புலி (2-ம் பக்கம் பார்க்க)

## இலவச பாடநூல் விரைவில் வடபகுதி அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு) 1994-ம் ஆண்டுக்குரிய இலவச பாடநூல்கள் வடபகுதிக்கு விரைவில் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படுமென்று கல்வி உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்தாண்டு பாடசாலை இலவச பாடநூல்களுக்கு அரசு 40 கோடி ரூபாவை செலவுசெய்து 180 லட்சம் பாடநூல்களை அச்சிட்டுள்ளது புதிதாக அச்சிடப்படும் ஆங்கில நூல்வரிசைப் புத்தகங்களும் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு விநியோகிக்கப் படும் என்றும் கல்வி உயர்கல்வி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (வி-இ)

## பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி 4- பக்கம்

(யாழ்ப்பாணம்) 1992/93 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்குரிய வெட்டுப்புள்ளி விபரங்களை உயர்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. இந்த விபரங்கள் அடங்கிய அட்டவணை இன்றைய ஈழநாடு இதழின் நான்காம் பக்கத்தில் வெளியாகியுள்ளது. (இ)

## வடபகுதி தமிழ் குடும்பம் ஜேர்மனியில் தீமூட்டி கொலே!

(பேர்லின்) யாழ்ப்பாணம் மண்டைதீவைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர் நாலவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஜேர்மனியில் தீமூட்டிக் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மண்டைதீவைச் சேர்ந்த இராஜ இராஜேஸ்வரலிங்கம் என்பவரும் அவரது ஜேர்மனிய மனைவியும் அவர்களது இருபிள்ளைகளுமே தீமூட்டிக் கொல்லப்பட்டவர்களாவர்.

ஜேர்மனியில் அகதிகளுக்கு எதிராகச் செயற்படும் தீவிரவாத அமைப்பான 'மொட்டைத் தலையர்கள்' (ஸ்கின் ஹெட்ஸ்) என்ற அமைப்பே இக் கொலையைச் செய்ததாக (4-ம் பக்கம் பார்க்க)

### நாகர்கோயில் பகுதியில்

## கடற்படை கோரத் தாக்குதல் 3 மீனவர்கள் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்) வடமராட்சி நாகர் கோயில் பகுதியில் உள்ள மாமுனை கடற்பரப்பில் மீனவர் மீது கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான திடீர் தாக்குதலில் மூன்று மீனவர் பலியானதுடன் பல மீனவர் காணாமல் போயுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன (4-ம்பக்கம் பார்க்க)

## மீனவர் படகு மூழ்கடிப்பு

(நெல்லியடி) வடமராட்சி கிழக்கு மாமுனைக் கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் மீனவர் சென்ற இயந்திரப் படகு கடலில் மூழ்கியது.

இந்தப் படகில் சென்ற பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த ரவி (வயது 25), அன்ரன் (வயது 25) ஆகிய மீனவர்கள் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர் என ஆங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே அங்கு கடல் பகுதி ஒரே புகைமண்டலமாக காட்சியளித்தது என உயிர் தப்பிய மீனவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். —160-இ

## காயமடைந்தோர் விபரம்

(நெல்லியடி) வடமராட்சி கிழக்கிலுள்ள மாமுனைக் கடலில் இடம் பெற்ற கடற்படையினரின் தாக்குதலில் காயமுற்றவர்களில் பலர் கடலில் குதித்து நீந்தி கரை சேர்ந்தனர். இவர்கள் குண்டுக்காயங்களுடன் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் வருமாறு:

இராமசாமி (வயது 39), பாலசுந்தரம் (வயது 28), தேவராஜா (வயது 28), பசுபதிநாதன் (வயது 62). —160-இ

## படகின் 'புரொப்பெலர்' மீனவர் தலையை துண்டாடியது

(நெல்லியடி) சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டபோது படகோட்டியும் நானும் கடலில் குதித்தோம். அவ்வேளை கடற்படை விசைப்படகு எமக்கு மேலால் சென்றதனால் படையினரின் படகின் 'புரொப்பெலர்' ஓட்டியின் தலையைத் துண்டாடியது. 4-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### நோவு வைத்தியம்


ஒட்டைப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் கிடைக்குமிடம் எஸ். கே. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி- 466)

### வாங்குகிறோம்

சுத்தமான வேப்பம் விதை, வேப்பம் கோது, இலுப்பம் விதை விலைக்கு வாங்குகிறோம். "மிக்கவைற்" (ஏ-3480)

### தாரணி
### (கேள்வி பதில் பத்திரிகை)

சோதிடம், மருத்துவம், குடும்ப, சத்தோர் பிரச்சினைகள், அறிவியல், இலக்கியம் சம்பந்தமான கேள்விகளை அஞ்சலட்டையில் அனுப்பலாம். பதிலளிக்கப்படும்:- தாரணி, 55, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (ஏ 3484)



## மகாவித்தியாலய கொடுப்பனவு

முதலாம் வருட மாணவர்களுக்கான 4-ம் தவணைப் பணமும், ஏனைய வருட மாணவர்கட்கான 9-ம் தவணைப் பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவுகளுக்கான நேர சூசிகை பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன.

பதிவாளர்
(ஏ-3483)

## திருநாள்

(அரியாலை)

யாழ். இராசாவின் தோட்டம் அருள்மாதா திருநாள் கடந்த 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. -59

## குளங்கள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

இமையாணன் மேற்கு துவாளி கட்டுக் குளம் அண்மையில் அப்பகுதிப் பொதுமக்களால் சிரமதானப்பணிமூலம் மண் வெளியே எடுத்துத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (154)

0 0 0

(உடுவில்)

எதிர்வரும் காலபோகநெற் செய்கைக்கு வேண்டிய நீரைச் சேமித்து வைக்கக்கூடிய முறையில் பல குளங்கள் ஆழமாக்கப்பட்டு வருகின்றன. மானிப்பாய் இருக்கும் கிணற்றடியை அண்டியுள்ள கிராய்க் குளம் இந்தவகையில் ஆழமாக்கப்பட்டுள்ளது.

இதேபோல வலிகாமம் தெற்குப் பிரதேசத்திலும், உடுவில் குளம், சந்தரோடைக் குளம், ஏழாலை பெரியதம்பிரான் குளம், ஆகியனவும் ஆழமாக்கப்பட்டு வருகின்றன. (109)

# கட்டாக்காலிகளின் உரிமையாளருக்கு எச்சரிக்கை

(உடுவில்)

கட்டாக்காலி ஆடு, மாடுகளின் சொந்தக்காரர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்போவதாக வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவு உதவிஅரசாங்க அதிபர் செல்வி ரூபிணி வரதலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுமக்கள் தங்கள் ஆடு மாடு போன்ற கால்நடைகளை கட்டி வளர்க்கவேண்டும் காலபோக நெற்செய்கை ஆரம்பித்துவிட்டமையால் கட்டாக்காலி கால்நடைகள்மூலம் விவசாயிகளுக்கு பெரும் அழிவுகள் ஏற்படலாம்.

எனவே கால்நடைகளை கட்டி வளர்க்காத சொந்தக்காரர்கள் மீது கடும் நடவடிக்கையை நாம் மேற்கொள்ளவேண்டிய ஏற்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (109-வி)

## ஓய்வூதியம் வழங்கப்படுகிறது

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவு தற்போது அலைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருகின்றது. (101)

## குழாய்க் கிணறு

(கொழும்புத்துறை)

பண்ணாலம் கிராம அபிவிருத்திச் சங்கம் அமைந்துள்ள வளவில் ஆறாயிரம் ரூபா செலவில் குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகச் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (154)

## மண்ணெண்ணெ விநியோகம்

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க பாவனையாளர்களுக்கு தற்போது மண்ணெண்ணெ விநியோகிக்கப்படுகின்றது. பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு ஒன்றரை லீற்றர் மண்ணெண்ணெ லீற்றர் 25 ரூபா விலையில் சங்கத்தின் கே. கே. எஸ். வீதியில் உள்ள கிளையொன்றில் வழங்கப்படுகின்றது. -101

## கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படுகின்றன

(அரியாலை)

யாழ்.நகரப் பகுதிகளிலும், கல்வியங்காடு, திருநெல்வேலி, நல்லூர் பகுதிகளிலும் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களை யாழ் மாநகர சபை ஊழியர்களால் பிடிக்கப்படுகின்றன. (59)

### உலர் உணவு
## பொருள் விநியோகம்

ஆனைப்பந்தி

இராணுவ நடவடிக்கைகளினால் வெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இருந்து இடம்பெயர்ந்து வட்டக்கச்சி மிருசுவில், நாவற்குழி ஆகிய இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கு புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நிவாரண உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றது. (101)

### 230 குடும்பங்கள்
## நாவற்குழியில் தஞ்சம்

(ஆனைப்பந்தி)

இராணுவ நடவடிக்கைகளினால் வெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இருந்து இடம்பெயர்ந்த தீவக மக்களில் 240 குடும்பங்களைச் சேர்ந்த 1150 பேர் தற்போது நாவற்குழி லவனிதா குடியிருப்பில் தங்கியுள்ளனர். (101)

## கருத்தரங்கு

(வேலணை)

யாழ். மாவட்டத்திலுள்ள பாலர் பாடசாலைகளில் கல்வியைப் போதித்துவரும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்றினை எதிர் வரும் 20 ம் திகதி நடாத்தப்படவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் நவீன முறைகளில் பாலர்களுக்குக் கல்வியை கற்பிக்கும் முறைகளும் அறிவுறுத்தப்படும்.

யாழ். கச்சேரி வீதி 77-ம் இலக்கத்திலுள்ள றெட்பானா நிறுவனத்தின் பயிற்சி நிலையத்தில் இப்பயிற்சி கருத்தரங்கு நடைபெறும். -75

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 40-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. க. ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடைபெறும்.

## விசேட கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள சனசமூகநிலையங்களின் உபஅலுவலக சமாசங்கள், பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை சமாசங்கள், சம்மேளனம் ஆகியவற்றின் யாப்புகள்பற்றி ஆராயும் ஒரு விசேட கூட்டம் எதிர்வரும் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் இக்காரியாலயத்தில் இடம்பெறும். -154

## கோடாரி வீழ்ந்து பலத்த காயம்

(யாழ்ப்பாணம்)

விமானத் தாக்குதல் இடம்பெற்ற வேளை மரத்தில் விறகு தறித்துக் கொண்டிருந்தவரின் காலில் கோடரி பட்டு படுகாயமடைந்துள்ளார்.

தென்மராட்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமானத்தாக்குதலின்போது நாவற்கோவில் பகுதியில் மரத்தின்மேல் இருந்து விறகு தறித்தவர் விமானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது கோடரி கைப்பிடி தடக்கி இடதுகாலில் வீழ்ந்து பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையில் இருந்து இடம்பெயர்ந்து கொடிகாமத்தில் வசிக்கும் செபஸ்தியாம்பிள்ளை யூட் செல்வன் (வயது 32) என்பவரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கி)

## பேச்சுப் போட்டி நடத்த ஏற்பாடு

(உடுவில்)

இணுவில் கந்தசாமிகோவில் இளம் தொண்டர்சபையினர் இவ்வருடம் நவராத்திரி தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளனர்.

இளம் தொண்டர் சபை பணிமனையில் நாளை 9ம் திகதி காலை போட்டிகள் நடைபெறும்.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு மேற்பிரிவு என மூன்று நிலைகளிலும் முதலிடம் பெறுபவர்களுக்கு தங்கப்பதக்கம் விஜயதசமி தினத்தன்று வழங்கப்படும். -109

# பணிகள் செய்தால் ஆலயங்கள் உயரும்

(உடுவில்)

ஆலயங்களில் தொண்டுகள் பணிகள் செய்ய வேண்டும் பணிகள் செய்தால் ஆலயங்கள் உயரும். ஆலயங்களின் உயர்வில் தான் சமுதாய வளர்ச்சி தங்கியுள்ளது.

உடுவில் சிவஞானப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு சந்திரசேகர இந்திர சரஸ்வதிசுவாமிகளின் ஜயந்தி விழாவில் சிறப்புரையாற்றிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு கூறினார்.

பிரம்மஸ்ரீ சி. வெங்கடேச சர்மா தலைமையில் நடைபெற்ற சுவாமிகள் பற்றிய உரையில் தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் பேசியதாவது:

சுவாமிகள் ஒரு நடமாடும் தெய்வம். அவர் காலத்தில் நாம் வாழ்வதே எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம். சுவாமிகளின் ஜயந்திவிழாவை ஒவ்வொரு ஆலயங்களிலும் விழா எடுத்துக் கொண்டாட வேண்டும்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத்தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் கூறியதாவது:-

அறியாமையை நீக்கி ஞான ஒளி தருபவனே குரு. எம் எல்லோர்க்கும் குருவாக சுவாமிகள் விளங்குகிறார். எமது சமயம் குருவுக்குத் தரும் மதிப்பைப்போல வேறு சமயங்கள் வழங்குவதில்லை. குரு தத்துவத்தில் சிறப்பு சைவசமயத்தில் சிறப்பாக பேணப்படுகிறது நாம் வாழும் காலத்திலேயே அடுத்த குருமார்களை உருவாக்கும் பாரம்பரியம் எமது சமயத்தில் தான் உண்டு.

பிரம்மஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், பிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், சைவப் புலவர் திரு. எம். எஸ். ஸ்ரீதயாளன் ஆகியோரும் உரையாற்றினர். -109

### கருணாநிதியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் அரசியல் துறையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டு அரசியல் உலகில் நீண்டகாலமாகவே விடுதலைப்புலிகள் இயக்கத்தை பிரதான பகடைக் காயாக வைத்து அரசியல் சதுரங்க ஆட்டம் நடைபெறுவதும், அரசியல் கட்சிகள் தமது சுயநல அரசியல் அபிலாசைகளுக்காகவும், அதிகாரப் போட்டிகளுக்காகவும் புலிகள் இயக்கத்தை மிகவும் கேவலமாக கொச்சைப்படுத்தி வருவதும் சகலரும் அறிந்த விடயமே. இந்தக் கேலிக்கூத்தான அரசியல் நாடக அரங்கில் கலைஞர் கருணாநிதியும் மேடையேறியிருப்பது எமக்கு ஒருபுறம் வியப்பையும் மறுபுறம் கவலையையும் தருகிறது.

அன்று தொட்டு இன்றுவரை, எமது விடுதலை இயக்கம் இந்திய அரசியல் முரண்பாட்டுக் களத்தில் சிக்கவைக்காது கட்சி சார்பற்ற நடுநிலையைப் பேணிவருகிறது. நியாயமான எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பரந்துபட்ட இந்திய வெகுசனங்களின் குறிப்பாக தமிழ்நாட்டு மக்களின், ஆதரவை நாம் வேண்டி நிற்பதால் இந்த அணிசேராக் கொள்கையை நாம் கடைப்பிடித்து வருகிறோம். ஆயினும் இந்திய அரசியல் இயக்கங்கள் சில தமது சொந்த இலாபங்களுக்காக எமது இயக்கம் மீது வீண் பழிகளைச் சுமத்தி ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தி வருகின்றன. இந்த வரிசையில் இப்பொழுது கலைஞர் கருணாநிதியும் சேர்ந்து கொண்டது எமக்கு வேதனையைத் தருகிறது.

இன்று தமிழீழ மக்கள் பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறார்கள் எமது தேசத்தின் எல்லைகளில் எதிரியின் சேனைகள் குவிக்கப்பட்டு வருகின்றன. யாழ்.குடா நாடு மீது பெரியதொரு படையெடுப்பை நடத்த எதிரி ஆயத்தங்கள் செய்து வருகின்றான். சாவும் அழிவுமாக எதிரியின் அனர்த்தங்களால் எமது மக்கள் பெரும் துன்பப் பழுவை சுமந்து நிற்கிறார்கள். எமது மண்ணையும், மக்களையும் பாதுகாக்கும் பணியில் எமது விடுதலைப் போராளிகள் அளப்பரிய தியாகங்களைப் புரிந்து வருகிறார்கள். இந்த இக்கட்டான நேரத்தில், ஈழத் தமிழினம் பெரியதொரு இனஅழிவைச் சந்தித்துநிற்கும் ஆபத்தானவேளையில் இங்குள்ள எமது மக்களுக்காக குரல் கொடுக்க கடமைப்பட்டுள்ள தமிழகத் தலைவர்கள், எமது இயக்கத்தையும் போராட்டத்தையும் இழிவுபடுத்த முயல்வது எமக்கு ஆழ்ந்த வேதனையைத் தருகிறது. இந்த முயற்சி தமிழ்நாட்டு மக்களைக் குழப்பி திசை திருப்பும் கபட நோக்கத்தைக் கொண்டது இது தமிழீழ மக்களுக்கு இழைக்கப்படும் பெரியதொரு அநீதியாகவே நாம் கருதுகிறோம்.

இலங்கைத்தீவில் தமிழர் தாயகம் எரிந்துகொண்டிருக்கிறது இன அழிப்பு நடந்து கொண்டிருக்கிறது. எமது மக்களின் அவலத்தைப் புரியாது அவர்களது அழிவில் அரசியல் இலாபம் தேட முயல்வது மிகவும் கேவலமான இனப்பற்றற்ற செயலாகும் இனியாவது தமிழக அரசியல்வாதிகள் பொறுப்புணர்வுடன் ஒடுக்கப்படும் எமது மக்களின் உணர்வுகளை மதித்து எமது சுதந்திர இயக்கத்திற்கு களங்கம் ஏற்படாதவாறு செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

### மன்னாரிலும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாய் பனிமாளுர் இந்தத் தாக்குதலில் நவீன ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன -க-இ

### கருணாநிதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிகள் ஏந்திய கறுப்புப் பூனைப்படையின் பாதுகாப்பு வழங்குவதை குறித்தும் மத்திய அரசு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் கருணாநிதியின் உயிருக்கு உண்மையிலேயே ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவரது இல்லத்தில் ஆயுதம் ஏந்திய பொலிசார் காவலில் ஈடுபட்டுள்ளதாகவும் தலைமைப் பொலிஸ் அதிகாரியுட்பட 4 பொலிசார் தொடர்ந்து பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும் திரு. கருணாநிதி வெளியே செல்லும் சமயங்களில் பொலிஸ் ஜிப் வண்டியும் பாதுகாப்புக்காக செல்வதாகவும் அவ்வண்டியில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட இரு பொலிசார் கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும் தமிழக அரசின் ஏற்பாட்டின் பேரிலே இப்பாதுகாப்பு மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-இ

**மணிவாக்கு**

கண்டனத்துக்குப் பின் ஒளிக்கும் ஆதரவு மழைக்குப் பின் காயும் வெய்யிலை போன்றது.
- யொஹான் வேதிதே

## நமது நோக்கு

### வேஷம் கலைகிறதா?

"இலங்கை திரும்பும் தமிழ் அகதிகளின் உயிருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை இலங்கை அரசு அளிக்க வேண்டும். இதன்மூலமே அவர்களை இங்கு பாதுகாப்பாக அனுப்ப முடியும்?" என ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு கோரியுள்ளது.

அக்குழுவைச் சேர்ந்த ஜேர்மனியப் பெண் பிரதிநிதி மேலும் தெளிவாகக் கருத்துக் கூறியிருக்கிறார்.

அரச பயங்கரவாதத்தால் இங்குள்ள பெண்களும் சிறுவர்களும் படும் வேதனைகள் அப்பெண் பிரதிநிதிக்கு இரக்க சிந்தனையை ஏற்படுத்தியிருக்கிறது போலும்! அவர் தெரிவித்தது என்ன?

"ஜேர்மனியில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் இருக்கிறார்கள். இலங்கை அரசு அவர்களுக்குப் பொது மன்னிப்பும், உயிர்ப்பாதுகாப்புக்கு உத்தரவாதமும் அளிக்கும்வரை அவர்களை திருப்பி அனுப்பமாட்டோம்!"

இந்தக் கோரிக்கையும் உத்தரவாதமும் கேட்கப்பட்டதன் காரணம் என்ன?

"ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழர்கள் தாராளமாக நாடு திரும்பலாம். அவர்களின் நலன்களை அரசு கவனிக்கும். அவர்கள் தாம் விரும்பும் இடங்களில் குடியமர்த்தப் படுவார்கள்!" - இது அந்தக் குழுவிற்கு ஜனாதிபதி கூறிய செய்தி!

தமிழர்களின் நலன்கள், எறிகணை வீச்சாலும், புக்காரா விமானங்களாலும் எவ்வாறு கவனிக்கப்படுகின்றன என்பதை அக்குழு பூரணமாகத் தெரிந்திருக்க நியாயமில்லை.

மூடி மறைக்கப்பட்டு, திரித்துக் கூறப்பட்ட, பக்கம் சார்ந்த செய்திகளையே அவர்களுக்கும் கிடைத்திருக்கும்.

பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டு, துன்பங்களுக்கு ஆளான மக்களை நேரில் கண்டு கேட்டறிந்தால் அரசின் கொடூரம் பூரணமாகப் புரிந்திருக்கும்; கோரிக்கை மேலும் வலுப்பெற்றிருக்கும்!

இதேவேளை, காணாமற் போனவர்களைத் தேடிப் பிடிக்க குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது என ஜனாதிபதி தெரிவித்தார் எனக் குழு கூறியது.

ஆனால், அப்படி எதுவும் கூறப்படவில்லை என அரசு மறுத்துள்ளது! பாவம், ஐரோப்பிய குழுவிற்கு தலைசுற்றியிருக்கும்! அரசின் வேஷம் கலையத் தொடங்கியுள்ளது!

# இஸ்ரேல் பிரதமர் - அரபாத் மீண்டும் எகிப்தில் சந்திப்பு

## அமைதியை நிலைநாட்ட திடசங்கற்பம்

(கெய்ரோ)

இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ரபினுக்கும், பி.எல்.ஓ. தலைவர் யாசீர் அரபாத்துக்குமிடையில் நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

முதலாவது சந்திப்பை அமெரிக்காவின் ஜனாதிபதி பில் கிளிங்டன் ஏற்படுத்தினார். இப்போதைய சந்திப்பை எகிப்திய ஜனாதிபதி முபாரக் எதுவித ஆரவாரமுமின்றி ஏற்படுத்திக் கொடுத்தார்.

தாங்கள் ஏற்படுத்திக் கொண்ட சமாதான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வதில் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

திரு. ரபினும், திரு. அரபாத்தும் வாஷிங்டனில் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டால் யூதர்களிடையேயும், பாலஸ்தீனியர்களிடையேயும் எதிர்ப்பு குழப்பமும் இருக்கவே செய்கின்றன.

இதேவேளை அண்மையில் இந்த உடன்பாடு ஏற்பட்ட பின் இஸ்ரேலிய படைகள் காஸா பகுதியில் மேற்கொண்ட தீவிரவாதிகளை வலைபோடும் செயல் உடன்பாட்டை முறிக்கும் செயலாக கருதப்பட்டது.

இரு பகுதியிலும் யூதர்களின் கடும் போக்காளர்களும் பாலஸ்தீனியர்களின் தீவிரவாதிகளும் இருந்த போதும் அரசியல் இருதலைவர்களும் தலைநிமிர வேண்டுமாயினும் வரும் காலங்களில் இருஇனத்தவர்களும் சமாதானமாக வாழவும் வழி வகுக்கும் நோக்கில் திரு ரபினும் திரு. அரபாத்தும் இடர்பாடுகளை களைந்து சண்டைகளும் பலிகளும் ஏற்படாமலிருக்க வழி வகுக்க உறுதி பூண்டுள்ளனர்.

22 மாதங்களாக அரபிய தலைவர்களுக்கும் இஸ்ரேலிய தலைவர்களுக்குமிடையில் நடந்த பேச்சுக்களில் ஆக்கபூர்வமாக எதுவும் நிகழாத வேளையில் இரு தலைவர்களும் இரகசியமாக நடத்திய பேச்சில் உருவானதே காஸா, ஜெறிகோ பகுதிகளில் பாலஸ்தீனியர்க்கு சுயாட்சி வழங்கும் உடன்படிக்கை, தற்போதும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருக்கவேசெய்கின்றன, உதாரணமாக ஜெருசலம் நகர் யாருக்கு சொந்தமென்பது எனினும் இதுவும் பேச்சுவார்த்தை மூலம் இணக்கம் ஏற்பட இருதலைவர்களும் உறுதி பூண்டுள்ளனர்.

திரு. அரபாத் இந்த உடன்படிக்கையின் மூலம் பாலஸ்தீனியர்களுக்கு தனி ராஜ்யம் அமைக்க ஏதுவாக உலக நாடுகளின் பொருளாதார, ஆத்மீக உதவியை நாடியுள்ளார். இவைகளும் வந்தவண்ணமும் உள்ளன. நாடிழந்த அகதிகளாக 45 வருடங்களாக அலையும் பாலஸ்தீனியர்க்கு தனிநாடு அமையும் நாள் வெகு தூரத்தில் இல்லை. (கே)

### வங்கிக் கிளை வாடிக்கையாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்

மக்கள் வங்கியின் காங்கேசன்துறைக் கிளையில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தற்போது இடம்பெயர்ந்திருந்தால், அவர்கள் தங்கள் தற்காலிக - தற்போதைய முகவரியைக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

இதன் விபரம் கிளை முகாமையாளருக்கு கொடுக்கப்படும் வரை வாடிக்கையாளர்களுக்கு மாதாந்த வங்கிக் கூற்றுக்கள் அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### யாழ். மாநகர பகுதி வடிகால்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்கு மற்ற எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள வடிகால் வாய்க்கால்கள் யாவும் மழைநீர் தேங்கி நிற்காத வகையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாநகர ஆணையாளர் வே.பொ. பாலசிங்கம் எடுத்த தீவிர நடவடிக்கை காரணமாக இந்த வடிகால்கள்யாவும் செப்பனிடப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் நகரப் புறங்களிலுள்ள அனேகமான குழாய்கள் புனரமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (162-8)

### யாழ்ப்பாணத்தில் பரீட்சையை நடத்த கோரிக்கை

(மானிப்பாய்

பொது எழுதுவினைஞர் சேவையின் இரண்டாம் வகுப்பின் "ஆ" பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களை "அ" பிரிவிற்கு நியமிப்பதற்கான பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு யாழ். கச்சேரிப் பணிப்பாளரை பரீட்சார்த்திகள் கோரியுள்ளனர்

மேற்படி பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 20-ம் திகதி கொழும்பில் நடைபெறுமென பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

1992-ம் ஆண்டு இப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதுபோல் இம்முறையும் இங்கு நடைபெறுவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளனர். (71

### யாழ். நகரில் மீண்டும் குழாய் நீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்

யாழ். நகரப்பகுதியில் கடந்த சில காலமாகத் தடைப்பட்டிருந்த குழாய் நீர் விநியோகம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நன்மை கருதி யாழ். நகரின் சில பகுதிகளுக்கு குழாய்நீர் பெறுவதற்கான வசதிகளை யாழ்.மாநகர சபை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

பொதுமக்களின் குடிநீர்த் தேவைகளை கருத்திற்கொண்டு இப்பிரதேசங்களில் முப்பது குழாய்க்கிணறுகள் இதுவரை அமைக்கப்பட்டு நல்நீர் வழங்கப்பட்டுவருகிறது. இந்தத்திட்டத்தின் மேலும் 35 குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. [162-8

## பல்கலைக்கழகத்தின் முழு வளமும் சகலருக்கும் பயன்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

உயர் கல்வியைப்பெறுபவர்களுக்கு மட்டும் குறித்த ஒரு தொகை மக்களுக்காக பல்கலைக்கழகங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. பல்கலைக்கழகத்தின் முழு வளமும் சகல மக்களுக்கும் பயன்படவேண்டும் என்பதற்காகவும், பல்கலைக்கழகம் சாதாரண மக்களும் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் ஆரம்பிக்கப்பட்ட கற்கை நெறியே புறநிலைப்படிப்புகள் ஆகும்.

தமிழீழத்தின் தேவை கருதி த.பொ.மே நிறுவனம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்விமான்களை இணைத்து நீர்ப்பயன்பாடு, கடல்வளம், விலங்கு வேளாண்மை, உள்கட்டுமாணம், விவசாயம் போன்ற துறைகளில் பல தரப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இது போன்றே புறநிலைப்படிப்புகள் அலகில் வெற்றிபெற்ற செயல்முறை ஒன்றும் கல்வி நெறியையும் த.பொ.மே. நிறுவனம் பல்கலைக்கழக கல்விமான்களின் ஒத்துழைப்புடன் ஆரம்பித்தது.

வளங்களின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுத் தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த த.பொ.மே. நிறுவனம் பலதரப்பட்ட முன்மாதிரி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கான பெருந்திட்டமான ஆவணியை உருவாக்கும் நோக்கில் வடதமிழீழத்தில் இருந்து த.பொ.மே. நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட 46 பயிற்சியாளர்களுக்கும் ஏனைய துறைகளில் இருந்தும், பொது நிறுவனங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பலருக்கும் செயற்திட்ட செயல்முறைப் பயிற்சி யாழ். பல்கலைக்கழகத்தில் வழங்கப்பட்டது.

தமிழீழ வளங்கள் திட்டமிடலும் தேவையும், தரவு சேகரித்தல், தொழில்நுட்ப ஆய்வு, விவசாயத் திட்டங்கள் உருவாக்கல் சந்தை ஆய்வின் அவசியம், திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் கிராமிய சமூக கலாச்சாரம் என்ற தலைப்புகள் பற்றியும் விரிவுரைகள் நடைபெற்றன. மக்கள் நன்மை அடையக்கூடியதான இத்திட்டத்தின் மூலம் 2000 மாணவர்கள் வரை இதனால் பயன் அடைந்து வருகின்றனர். (இ

**குளம் இல்லா ஊருக்கும் பசுமை இல்லை**
**நீரில்லா ஊருக்கு நிறைவு இல்லை**

### சஞ்சிகை வெளியீடு

(அரியாலை)

சைவசித்தாந்த ஆங்கில சஞ்சிகையின் அரையாண்டு வெளியீட்டுவிழா கடந்த 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் - நல்லூர் கலாசாரமண்டபத்தில் திரு. ச. முத்தையா தலைமையில் நடைபெற்றது. -59

### இன்று

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி அருள்மிகு துர்க்கை தேவி தேவஸ்தான மகா சண்டிஹோம விழா இன்று 8-ம் திகதி முதல் 10-ம் திகதி வரை நடைபெறும். (ம)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழக தினத்தைமுன்னிட்டு இன்று 8-ம் திகதி பி.ப. 4 மணியளவில் அரியாலை ஆசிர்வாதப்பர் வீதியிலுள்ள சாந்தி சனசமூக நிலையத்தில் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவம் இடம்பெறவுள்ளது.

### விறகுகள் திருட்டு

(அரியாலை)

யாழ் இராசாவின்தோட்ட வீதியிலுள்ள எஸ். கனகரத்தினம் என்பவருடைய வீட்டில் கடந்த 4ம் திகதி வீட்டுக்காரர் ஆலயத்திற்கு சென்ற சமயம் பார்த்து திருடர்கள் வீட்டில் உள்ள விறகுகளைத் திருடிச் சென்றதாக தெரியவருகின்றது. (59)

### சுதந்திரப்பறவைகள் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

"சுதந்திரப் பறவைகள்" ஐப்பசி மாத இதழ் வெளிவந்துள்ளது. 2-ம் லெப்டினன்ட் மாலதியின் சிறப்பிதழாக வெளிவந்த இவ்விதழில் முன்னேறிய இராணுவத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டது. தலைப்புச் செய்தி விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முதல் பெண்புலி, 2-ம் லெப். மாலதியின் நினைவுக் கட்டுரை ஆகிய கட்டுரைகளும் - புதைகுழி வார்ப்புகள் - சிறுகதை கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. (ம)

## இராசிபலன்

8-10 1993
வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 22)

ஸப்தமி மு.ப. 8-28 வரை, திருவாதிரை மாலை 6-02 வரை சித்தயோகம், இராகு காலம் காலை 10-32 முதல் 12-02 வரை, சுபநேரம் காலை 6-02 முதல் 7 32 வரை.

மேஷம்: மனமகிழ்ச்சி, புதிய தந்திரம், தொழில் சிறப்பு.

இடபம்: மனக் கசப்பான சம்பவம், சிறு விரயம், அலைச்சல்.

மிதுனம்: காரிய வெற்றி, அறிஞர் சந்திப்பு, உரையாடல்.

கடகம்: காரணமற்ற குழப்பம், சிறுபிணி, மனவேதனை.

சிம்மம்: பிரச்சினைக்கு தீர்வு, தாயார் பாசம், பாராட்டு.

கன்னி: சுமுகமான போக்கு, பணவரவு, சந்தோஷ செய்தி.

துலாம்: எதிர்பாராத துன்பம், அகால போஜனம், பதட்டம்.

விருச்சிகம்: மனசஞ்சலம், தப்பபிப்பிராயம், வெறுப்பு.

தனுசு: பிறர் உதவு, காரிய வெற்றி, உறவினர் வருகை.

மகரம்: பேராசை, நினைத்தது கைகூடல், பிறர் நன்மை.

கும்பம்: முரட்டுக் குணம், தொழில் போட்டி, வெளியார் பிரச்சினை.

மீனம்: [illegible], பணக்கஷ்டம், புத்திர [illegible].

— ஜோஸ்யர்.

யாழ்ப்பாணம்

## 1992/93 - கல்வியாண்டு:

# பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விபரம்

1991 ம் ஆண்டு ஆகஸ்ட் (வடக்கு-கிழக்கில் 1992 ஏப்ரல் விசேட பரீட்சை) நடைபெற்ற க. பொ. த. (உயர்தர பரீட்சை முடிவுகளின் படி பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விபரம் வருமாறு:

| மாவட்டம் | மருத்துவம் | பல் வைத்தியம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உயிரியல் விஞ்ஞானம் | பொறியியல் I | பொறியியல் II | பௌதீக விஞ்ஞானம் | முகாமைத்துவம் | வர்த்தகம் | சட்டம் | கலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 266 | 262 | 259 | 249 | 241 | 290 | 280 | 251 | 291 | 276 | 281 | 243 |
| யாழ்ப்பாணம் | 261 | 260 | 259 | 249 | 236 | 284 | 276 | 247 | 286 | 273 | 272 | 248 |
| கிளிநொச்சி | 218 | 202 | — | 210 | 196 | 215 | 213 | 197 | 268 | 255 | 232 | 239 |
| மன்னார் | 222 | 216 | 212 | 194 | 181 | 250 | 181 | — | 254 | 243 | 234 | 239 |
| முல்லைத்தீவு | 197 | 195 | 191 | 189 | 182 | 210 | 201 | — | 244 | 238 | 214 | 245 |
| வவுனியா | — | 227 | 187 | 195 | — | 232 | – | — | 256 | 252 | 250 | 214 |
| திருகோணமலை | 227 | 226 | 224 | 208 | 199 | 255 | 230 | 186 | 266 | 257 | 267 | 239 |
| மட்டக்களப்பு | 232 | 227 | 221 | 212 | 202 | 242 | 233 | 184 | 270 | 255 | 255 | 246 |
| அம்பாறை | 241 | 236 | 235 | 229 | 210 | 246 | 242 | 182 | 263 | 254 | 265 | 243 |
| புத்தளம் | 249 | 248 | 246 | 238 | 224 | 262 | 259 | 198 | 276 | 261 | 280 | 249 |

# கிளாலிதாக்கு படையினர்க்கு வெற்றியைத் தரவில்லை

(கொழும்பு)

கிளாலிப் பகுதியின் ஊடாக விடுதலைப்புலிகள் நடாத்தி வரும் படகுச் சேவையை தடைசெய்யும் முகமாக இராணுவம் மேற்கொண்ட தாக்குதல் எதிர்பார்த்த அளவு வெற்றியை அளிக்கவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

விடுதலைப்புலிகள் இத்தாக்குதல் தொடங்குவதற்கு முன்பே அனைத்துப் படகுகளையும் வேறு இடங்களுக்கு நகர்த்தி விட்டார்கள்.

கிளாலிப் பகுதியில் இராணுவம் கைப்பற்றிய படகுகள் உபயோகத்துக்கு உகந்தவை

## இராணுவம் கவலை

அல்ல என்று விடுதலைப்புலிகளால் கைவிடப்பட்டவையே என்று இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

இதேநேரம் கிளாலிப் போரில் 11. இராணுவத்தினர் பலியானதாகவும் 260 இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் 450 படகுகளை கைப்பற்றி அழித்துவிட்டதாகவும் 40 பொதுமக்கள் இப்போரின் நடுவில் சிக்குண்டு பலியானதாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (வி)

## சிற்றூழியர்க்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் காவலாளிகள், தொழிலாளிகள், சுகாதார தொழிலாளிகள் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் கடந்த 27ம் திகதி தொடக்கம் யாழ். கல்வித் திணைக்களத்திலும் மருதனார்மடம் பருத்தித்துறை ஆகிய கோட்டங்களின் அலுவலகங்களிலும் நடைபெற்று வருகின்றன.

இப்பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவருக்கும் நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் யாவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பித்திருந்தும் நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் நாளை 09ம் திகதியன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தாங்கள் விண்ணப்பித்தமைக்கான ஆதாரத்துடனும் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான ஆவணங்களுடனும் சமூகமளிக்குமாறு இவர்களை யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இலங்கை, கோவில் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B!

### மண்ணெண்ணெய்க்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள், பொதுமுகாமையாளர்களின் கலந்துரையாடல் நேற்று நடைபெற்ற போது மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. —வி-இ

### நாகர் கோவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன.

நேற்று அதிகாலை 5-30 மணியளவில் மேற்படி கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த படகுகள் மீது கடற்படையினர் திடீர்தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலுக்கு எதிராக கரைப்பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எதிர்த்தாக்குதல்களினால் கடற்படையினர் பின்வாங்கினர்.

சிறிது நேரத்தின் பின் 4 கடற்படையினர் மேலும் சில படகுகளுடன் இப்பகுதிக்கு வந்து கடலில் நின்ற மீன்பிடி படகுகள் மீது 2-வது தடவையாக தாக்குதல் நடாத்திய போது மூன்று மீனவர் பலியானதுடன் மீனவர்களின் படகுகளும் மீன்பிடி சாதனங்களையும் கடற்படையினர் எரித்து சேதப்படுத்தினர்:

பல மீனவர் காயங்களுடன் கரைக்கு நீந்தி வந்துள்ள போதிலும் கடலில் குதித்த பல மீனவர் இன்னும் கரை சேரவில்லை யென்றும் இவர்கள் இறந்திருக்கலாம் அல்லது கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கலாமென்றும் கூறப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்திலும் கடற்படையினர் மீது கரையிலிருந்து பலத்த எதிர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதினால் கடற்படையினர் அவ்விடத்தைவிட்டு மீண்டும் சென்றனர். (வி-இ)

### வடபகுதி தமிழ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கவும் இதுவரையில் 30 பேர் வரையில் இவ் அமைப்பினால் கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளையில் கடந்த மாதம் இலங்கையைச் சேர்ந்த தமிழ் மாணவியான அஜிதா புவனேசுவரன் (13 வயது) என்பவரும் இக்கும்பலினால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு அகதிகள் அனைவரும் ஜேர்மனியை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்பது மொட்டைத் தலையர் அமைப்பின் பிரதான கோரிக்கை எனவும் தெரிவிக்கப்படுகிறது. —ஈ-ம-இ

### வடபகுதி வரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து வடபகுதிக்குச்செல்லும் பயணிகளதும் பொருட்களும் மிக கடுமையான பரிசோதனைக்குட்படுத்தப்படுமென மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா நேற்று வவுனியாவில் வைத்து கூறினார்.

புனருத்தாரண அமைச்சர் பி. தயாரத்னவும் மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவும் நேற்று வவுனியாவில் உள்ள தாண்டிக்குளம் சோதனை முகாமுக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளையில் வடபகுதிக்கு கொண்டுசெல்லப்படும் பொருட்கள் சம்பந்தமான நடவடிக்கைகளைக் கவனிக்க ஜெரி டி சில்வா தலைமையில் ஆணைக்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது தெரிந்ததே.

### இனப்பிரச்னையை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குமார் பொன்னம்பலம் கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார்.

திரு குமார் பொன்னம்பலம் மேற்படி விடயம் சம்பந்தமாக மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:

கொழும்பில் உள்ள தமிழ்க்கட்சிகளுடனும் தமிழ்க்காங்கிரஸ் அதன் தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துக் கொண்டுவிட்டது.

கொழும்பில் தமிழ்க்கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டு வருவதுடன் அரசு தமிழ்மக்கள் மீது மேற்கொண்டுவரும் அடக்கு நடவடிக்கைகளை கண்டும் காணாதது போல் அவை நடப்பதினாலும் இவர்களுடன் இனிமேலும் இணைந்து செயல்படுவதினால் தமிழ்மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை என்பதாலும் இவர்களுடனான தொடர்புகளை நாம் முற்றாக துண்டித்துக்கொண்டுவிளோம் என்றும் கூறினார்

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதமே உள்ளது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறிவருவது தெரிந்ததே. —வி-இ

### படகின் புரொப்பெலர்

1-ம் பக்கத் தொடர்ச்சி

இவ்வாறு நேற்றுக்காலை வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் உள்ள மாமுனை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படைத் தாக்குதலில் அகப்பட்டு உயிருடன் தப்பியவர்களில் ஒருவரான பருத்தித்துறை முனையைச் சேர்ந்த ஆசிர்வாதம் டொன் பொஸ்கோ- மரியசெல்வம் (வயது 23) தெரிவித்தார்.

அவர் இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிவித்ததாவது: வழமைபோல் நான் மீன் பிடிப்பதற்காக குறித்த கடலுக்குச் சென்றேன். அவ்வேளை எனக்கு முன்னால் வேறு ஆறு படகுகள் மீனவருடன் சென்றதைக் கண்டேன்

சில மணி நேரத்தின்பின் திடீரென வந்த சிறிலங்கா கடற்படையினர் எமது படகினைத் தாக்கினர். இதனால் பயத்தில் பல மீனவர்கள் கடலில் குதித்தோம்.

அவ்வேளை எமதைச் சுற்றி வளைத்த கடற்படையினர் எம்மைத் தமது ஆயுதங்களினால் தாக்கினார்கள்.

நாங்கள் பயத்தில் கடலில் குதித்தோம். எனது தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த இயந்திரப் படகின் உரிமையாளரான சின்னவன் (50 வயது) என்பவர் காயமுற்றார். கடலில் குதித்த அவரை அணுகிய கடற்படையினர் தமது விசைப்படகின் புரொப்பெலர் மூலம் தலையைத் துண்டித்தனர்.

அவரின் தலை ஒரு புறமும் உடல் ஒரு புறமும் கடலில் மிதந்ததைக் கண்டேன்.

மேலும் வேறு சில படகுகள் கடற்படையினரின் தாக்குதலால் எரிவதையும் கண்டேன் என்றார். —160-இ